# ஆகஸ்ட் - 28 - திங்கள்

## புனித அகுஸ்தீன்

## முதல் வாசகம் : 1 தெசலோனி 1:2–5, 8–10

சகோதர சகோதரிகளே! நாங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது இடைவிடாது உங்களை நினைத்து உங்கள் அனைவருக்காகவும் என்றும் கடவுளுக்கு நன்றி கூறுகிறோம்.செயலில் வெளிப்பட்ட உங்கள் நம்பிக்கையையும், அன்பினால் உந்தப்பட்ட உங்கள் உழைப்பையும், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை எதிர்நோக்கி இருப்பதால் நீங்கள் பெற்றுள்ள உங்கள் மனவுறுதியையும் நம் தந்தையாம் கடவுள்முன் நினைவு கூருகிறோம்.கடவுளின் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! நீங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.ஏனெனில் நாங்கள் நற்செய்தியை உங்களுக்கு வெறும் சொல்லளவிலன்றி, தூய ஆவி தரும் வல்லமையோடும் மிகுந்த உள்ள உறுதியோடும் கொண்டுவந்தோம். உங்கள் பொருட்டு நாங்கள் உங்களிடையே எவ்வாறு நடந்துகொண்டோம் என்பதும் உங்களுக்குத் தெரியும். எப்படியெனில் ஆண்டவருடைய வார்த்தை உங்கள் நடுவிலிருந்தே பரவியது. கடவுள்மீது நீங்கள் நம்பிக்கை கொண்டிருப்பது மாசிதோனியாவிலும் அக்காயாவிலும் மட்டும் அல்ல, எல்லா இடங்களிலும் தெரியவந்துள்ளது. எனவே இதைப்பற்றி நாங்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையே இல்லை.நாங்கள் உங்களிடம் வந்தபோது எவ்வாறு நீங்கள் எங்களை வரவேற்றீர்கள் என்று அவர்களே கூறுகிறார்கள். நீங்கள் எவ்வாறு சிலைகளை விட்டுவிட்டு, உண்மையான, வாழும் கடவுளுக்கு ஊழியம்புரியக் கடவுளிடம் திரும்பி வந்தீர்கள் என்றும் கூறிவருகிறார்கள்.இவ்வாறு நீங்கள் வானினின்று வரும் அவருடைய மகன் இயேசுவுக்காகக் காத்திருக்கிறீர்கள். அவரே வரப் போகும் சினத்திலிருந்து நம்மை மீட்பவர். இறந்த அவரையே தந்தை உயிர்த்தெழச் செய்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கிறார்.

## நற்செய்தி : மத்தேயு 23 : 13 – 22

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு!மக்கள் நுழையாதவாறு அவர்கள் முன்பாக விண்ணக வாயிலை அடைத்துவிடுகிறீர்கள் நீங்கள் நுழைவதில்லை, நுழைவோரையும் விடுவதில்லை. ”வெளிவேடக்கார மறைநூல் அறிஞரே, பரிசேயரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு, நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகின்றீர்கள் அவ்வாறு சேர்த்தபின் அவரை உங்களைவிட இருமடங்கு நரகத் தண்டனைக்கு ஆளாக்குகிறீர்கள்.”குருட்டு வழிகாட்டிகளே, ஐயோ! உங்களுக்குக் கேடு! யாராவது திருக்கோவிலின்மீது ஆணையிட்டால் ஒன்றுமில்லை ஆனால் அவர் கோவிலின் பொன்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் என்கிறீர்கள்.குருட்டு மடையரே! எது சிறந்தது? பொன்னா? பொன்னைத் தூயதாக்கும் திருக்கோவிலா?யாராவது பலிபீடத்தின ் மீது ஆணையிட்டால் ஒன்றுமில்லை ஆனால் அவர் அதில் படைக்கப்பட்ட காணிக்கையின்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர் என்கிறீர்கள்.குருடரே! எது சிறந்தது? காணிக்கையா? காணிக்கையைத் தூயதாக்கும் பலிபீடமா? எனவே பலிபீடத்தின் மீது ஆணையிடுகிறவர் அதன்மீதும் அதன ் மேலுள்ள அனைத்தின்மீதும் ஆணையிடுகிறார். திருக்கோவிலின்மீது ஆணையிடுகிறவர் அதன்மீதும் அதில் குடிகொண்டிருக்கிறவர்மீதும் ஆணையிடுகிறார்.வானத்தின் மீது ஆணையிடுகிறவர் கடவுளின் அரியணைமீதும் அதில் வீற்றிருக்கிற கடவுள்மீதும் ஆணையிடுகிறார்.

**தியானம் :** இன்றைய தியான வாசகங்கள் நாங்கள் பரிசேயர், சதுசேயர் போன்று வெளிவேடத்துடன் வாழாது இறைவனின் ஆசீர்வாதத்துடன் நீதி, நேர்மை, இரக்கம் கொண்டவர்களாக ஒருவர் ஒருவர் மீது நம்பிக்கை கொள்ளவும், எந்நாளும் இறையரசைப்பற்றி அறிவிக்கவும் வேண்டுமென்று அழைக்கின்றது. அன்று பரிசேயர், சதுசேயர் தாங்கள் ஒருகாரியமும் செய்வதில்லை, மற்றவர்களையும் செய்யவிடுதில்லை. அவர்களைப் பார்த்துத்தான் பரிசேயரே உங்களுக்கு ஐயோ கேடு என்று இயேசு கூறுகின்றார். இன்று நாங்களும் அவ்வாறான வாழ்க்கைதான் வாழ்ந்து கொணடிருக்கின்றோம். மற்றவர்கள எதைச்செய்தாலும் குறைகூறுவது, ஏதோவொரு காரணத்தை திணித்து அதைச் செய்யாது தடுத்துவிடுவது, அவ்வாறு செய்துவிட்டு நல்லவர்கள், இரக்கமுள்ளவர்கள் என்று வாழ்கின்றோம். அவ்வாறு வாழாமல் கடவுளுடைய வல்லமையைப் பெற்றுக்கொண்டு மாசிதோனியாவிலும், அக்காயாவிலும் மட்டுமல்ல பலநாடுகளில் நற்செய்தியை தெசலோனிக்கேய சபையினா் தெரிவித்தார்களோ அதேபோன்று நாங்களும் பல நாடுகளில் இறைசெய்தியை அறிவிக்க வேண்டும். (1தெச.1:8). ஆனால் இவ்வாறான செயற்பாடுகள் எம்மத்தியில் காணப்படுவதில்லை. காரணம் நாங்கள் தூய ஆவியானவரின் வல்லமையை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்தாததேயாகும். எனவேதான் தூய ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களாக யெருசலேமிலும், சமாரியாவிலும், யூதேயாவிலும் உலகின் கடையெல்லை வரையும் சாட்சியாய் இருப்பீர்கள் என்று (தி.பணி.1:8)ம் வசனத்தில் இயேசு சீடர்களுக்கு கூறுவதைப் பார்க்கின்றோம். எனவே உலகின் தலைசிறந்ததாகிய அன்பு எம்மத்தியில் காணப்படுமாயின் நீதி, நேர்மை, இரக்கம் யாவும் தானாகவே எம்மத்தியில் காணப்படும். இவற்றை மனதில்கொண்டு வெளிவேடத்தடன் வாழாது தூய உள்ளத்துடன் நற்செய்தியை அறிவிக்க தாய ஆவியானவரிடம் வரம் வேண்டுவோம்.